# ராயல்கேர் மருத்துவமனையில் மரபணு பரிசோதனை ஆராய்ச்சி நிறுவனம்



**கோவை, ஜூலை.8**

கோவை குறிஞ்சி மருத்துவமனையில் செயல்பட்டு வந்த எம்டிசி.ஆர்.சி என்ற மரபணு பரிசோதனை மற்றும் கலந்தாய்வு பராமரிப்பு ஆராய்ச்சி நிறுவனம் நீலாம்பூர் ராயல்கேர் உயர் சிறப்பு மருத்துவமனைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடக்கவிழா ஆர்ய வைத்ய பார்மசியின் நிர்வாக இயக்குனர் பத்மஸ்ரீ டாக்டர். பி.ஆர். கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது. விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் எம்டி. சி.ஆர்.சி நிறுவனர் முனைவர் பி.ஆர்.லட்சுமி வரவேற்று பேசினார்.

விழாவில் என்.ஐ. இ.பி.எம்டி இயக்குனர் டாக்டர் ஹிமாங்ஷுதாஸ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு எம்டி. சி.ஆர்.சி புதிய வளாகத்தை குத்து விளக்கு ஏற்றி தொடங்கிவைத்தார்.

விழாவில் கூகிள்ஹெல்த் தலைவர் டாக்டர் துஷ்யந்த் சின்ஹா ஜடேஜா, டாக்டர் ரிதேஷ் நாராயண்பூர், ராயல்கேர் உயர் சிறப்பு மருத்துவமனை நிறுவனர் மற்றும் சேர்மன் டாக்டர் மாதேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து எம்டி.சி.ஆர்.சி நிறுவனத்தின் சேர்மன் முனைவர். பி.ஆர். லட்சுமி கூறியதாவது :

உலகம் முழுவதும் 3500 குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தைக்கு தசை சிதைவு நோய் ஏற்படுவதாக உலக புள்ளி விவரம் கூறுகிறது. ஆனால் உலகளவில் ஒப்பிட்டால், நம் தமிழகத்தில் அதிகள்வில் இந்நோய் காணப்படுகிறது.

இது அரிய வகை நோய் என வரையறுக்கப்பட்டாலும் இது ஒரு புறக்கணிக்கப்பட்ட அநாதை நோயாகும்.

இந் நோய் மரபு வழி வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கும் இந்நோய்க்கு மருந்து இன்றளவிலும் கண்டறியப்படவில்லை. நாம் கற்ற அறிவியல், சமுதாயத்தை சென்றடைவதே எம்டி.சி.ஆர்.சியின் நோக்கமாகும்.

பிறபகல் (08-07-2019)